## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்புகள் 2012–2013 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களை ஊக்கப்படுத்த மாநில அளவிலான பரிசுத் தொகைகள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை ( நிலை) எண் : 64 நாள் : 25.06.2012

ஆனி11 திருவள்ளுவராண்டு 2043

படிக்கப்பட்டது.

பார்வை: ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண்
23/3575/2012 நாள் 21.02.2012 மற்றும் 21.05.2012.

ஆணை :

2012–2013ஆம் ஆண்டின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) அவர்கள் புதிய அறிவிப்பாக பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

“ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் தேர்ச்சி பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களை ஊக்கப்படுத்த மாநில அளவிலான பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

| பரிசுகள் | மாணவர்களின் எண்ணிக்கை | பரிசுத் தொகை | |
|---|---|---|---|
| | | 10ஆம் வகுப்பு | 12ஆம் வகுப்பு |
| முதல் பரிசு | 01 | ரூ. 10,000 | ரூ. 10,000 |
| இரண்டாம் பரிசு | 01 | ரூ. 7,000 | ரூ. 7,000 |
| மூன்றாம் பரிசு | 01 | ரூ. 5,000 | ரூ. 5,000 |

மூன்று பிரிவினில் 18 மாணவ/மாணவியருக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1,32,000/– செலவில் பரிசுத் தொகைகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புதிய அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிருத்தவ ஆதிதிராவிட மாணவ/மாணவியருக்கு மாநில அளவிலான பரிசுத் தொகையினை வழங்குவதால் ஏற்படும் செலவினமான ரூ.1,32,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யுமாறு ஆதிதிராவிட நல ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவிக்கு இனம் ஒன்றிக்கு ஒருவர் வீதம் பின்வரும் பரிசுத் தொகையினை 2012–13 ஆம் கல்வியாண்டு முதல் வழங்க அரசு ஆணையிடுகிறது.

| பரிசுகள் | இனம் ஒன்றிக்கான மாணவ/மாணவிகள் எண்ணிக்கை | பரிசுத் தொகை | |
|---|---|---|---|
| | | 10ம் வகுப்பு | 12ம் வகுப்பு |
| முதல் பரிசு | 01 | ரூ. 10,000/– | ரூ. 10,000/– |
| இரண்டாம் பரிசு | 01 | ரூ. 7,000/– | ரூ. 7,000/– |
| மூன்றாம் பரிசு | 01 | ரூ. 5,000/– | ரூ. 5,000/– |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதி திராவிடர் நலன் – 277 – கல்வி – I – திட்டத்தில் சேராதது – AG – ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல் – 59–பரிசுகளும் வெகுமதிகளும்"

"(த.தொ.கு.2225–01–277–AG-5904)"

5. தற்போது நடைமுறையில் உள்ள மாநில/மாவட்ட அளவிலான பரிசுத் தொகை வழங்கம் திட்டத்தின் கீழும் தற்போது தோற்றுவித்துள்ள திட்டத்தின் கீழும் ஒரே மாணவர்/மாணவி பரிசு பெற தகுதியுடையவராயிருப்பின் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் மட்டுமே பரிசுத் தொகை வழங்கப்படவேண்டும் என்று ஆணையர், ஆதிதிராவிடர் நலன் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்திற்கான தொகையை 2013–14ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கான கருத்துருக்களை நிதி (ஆதி (ம) பந) துறைக்கு திருத்திய மதிப்பூடு 2012–13/வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2012–13ல் சேர்த்து அனுப்புமாறும் ஆணையர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.நிதி(ஆதி(ம) பந/ADS/12 நாள் 20.06.2012 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–6.
இயக்குநர் உயர்கல்வித் துறை, சென்னை–6.
இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
நகல்:–
நிதித்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/6/12
பிரிவு அலுவலர்.
25/6/2012